12.09.2025 OS.No.65/2015 PW1 Name :.ரீட்டா

குறுக்கு விசாரணை

1. நான் 12 வகுப்பு படித்துள்ளேன். விக்கிரைய ஒப்பந்தத்தின் முத்திரை தாளை யார் வாங்கி வந்தார்கள் என்பது எனக்கு தெரியாது. விக்கிரைய ஒப்பந்தத்தை பத்திர அலுவலத்தில் தயார் செய்தார்கள். யார் தயார் செய்தார்கள் என்று பெயர் தெரியாது. பத்திரம் தயார் செய்வதற்கான தகவல்களை என் கவணர் கொடுத்தார் என்றால் நிலத்தின் உரிமையாளரும் உடன் இருந்து கொடுத்தார். சொத்துகள் பிதுராஜ்ஜிய சொத்துகள் என வழக்கில் குறிப்பிட்டுள்ளேன். வழக்கு சொத்து மொத்தம் 6 நபர்களுக்கும் பாத்தியபட்டது என்றால் சரிதான். அ.வ.எண்.12/2017 என்ற வழக்கை தனியாக போட்டுள்ளேன்.
2. 6 நபர்களுக்கிடையில் எழுத்து மூலமாக பாகபிரிவினை ஆகவில்லை என்பது தெரியுமா என்றால் அவ்வாறு எழுதியுள்ளார்கள். பாகபிரிவினை ஆவணத்தில் பாலகிருஷ்ணக்கு 75 செண்ட் ஒதுக்கப்பட்டது என அ.வ.எண். 12/2017 வழக்கில் சாட்சி கூறியுள்ளேன். அந்த சொத்து சர்வே எண். 185 மற்றும் 187/37 சம்மந்தபட்டது ஆகும். அந்த 75 செண்டை தான் பாலகிருஷ்ணன் விற்கமுடியும் என்றால் அவருக்கு சொந்தமான சொத்துகளை அவர் விற்கமுடியும். வழக்கு ஒப்பந்தம் போட்ட தேதியில் என்னிடம் பணம் இருந்தது என்பதை காட்டகூடிய எழுத்துமூலமாக ஆவணங்கள் இல்லை. ஒப்பந்தம் கணிணியில் தான் தயார் செய்யபட்டது.

3. பாலகிருஷ்ணன் கையெழுத்து போடகூடிய நபர் என்றால் சரிதான். அ.வ. எண். 12/2017 வழக்கில் பாலகிருஷ்ணன் கிரைய பத்திரம் எழுதி கொடுத்ததாக சொல்லியுள்ளேன். அந்த கிரைய பத்திரத்திற்கான தொகை எவ்வளவு என்பது எனக்கு தெரியும். தாவா கிரைய ஒப்பந்தத்தில் மீதி பாக்கி கிரைய தொகை எவ்வளவு என்பது தெரியும். ரூ.1,75,000/– பாக்கி தொகை உள்ளது. அந்த பணத்தை நாங்கள் தயார் செய்து வைத்திருந்தோம் ஆனால் கிரைய ஆவணம் எழுதிகொடுக்க முன்வரவில்லை. ஒப்பந்த தேதி முடிந்து சுமார் 3 மாதம் கழித்து அந்த பணத்தை தயார் செய்தோம்.

4. அந்த இடைப்பட்ட காலத்தில் எங்களிடம் பாக்கிபணம் இல்லை. கிரைய பத்திரம் 26.09.2014ல் எழுதபட்டது. தாவா கிரைய ஒப்பந்தமும் அதே தேதியில் தான் எழுதபட்டது. கிரைய பத்திரத்திற்காக 26.09.2014ல் என்னிடமும் பாத்திமாவிடமும் இருந்த மொத்த தொகை ரூ.3,00,000/– என்றால் சரிதான். அதை பாதிபாதியாக இருவரும் பிரித்து கொடுத்தோம். அந்த தொகை நகையை அடமானம் வைத்து கொடுத்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

5. என்னுடைய வருமானம் மாதம் ரூ.5000 என கூறியுள்ளேன். 26.09.2014ல் ரூ.1,50,000/–த்தை நான் கொடுக்கவில்லை என் கணவர் தான் கொடுத்ததாக கூறியுள்ளேன். நகையை அடமானம் வைத்து ரூ.1,00,000/– கடன் வாங்கினேன். மீதி ரூ.50,000/– யாரிடம் வாங்கபட்டது என்பது என் கணவருக்கு தான் தெரியும். பாலகிருஷ்ணனுக்கு பணம் கொடுத்த விவரத்தை நான் நேரிடையாக பார்க்கவில்லை என் கணவர் சொல்லிதான் தெரியும். தாவா கிரைய

ஒப்பந்தத்தை மரியா ஜோசப் என்ற வழக்கறிஞர் சான்றொப்பம் செய்துள்ளார்.

6. பாத்திமாவின் கணவர் முன்னால் எம்எல்எ என்றால் சரிதான். என் கணவரின் தம்பி ஏசு என்பவர் வாணியம்பாடி நீதிமன்றத்தில் வழக்கறிஞராக பணி செய்கிறார். மரியஜோசப் வழக்கறிஞர் ஜூனியர் வழக்கறிஞர் ஏசு என்றால் எனக்கு தெரியாது. 24.09.2014ல் நிலோபர் கபில் மருத்துவமனையில் பாலகிருஷ்ணன் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று இருந்தார் என்றால் உண்மை கிடையாது அவ்வப்போது மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்று வீடு திரும்புவார். மருத்துவனையில் இருந்துதான் பாலகிருஷ்ணன் கூட்டிவந்து தாவா கிரைய ஒப்பந்தத்தில் அவரிடம் கைரேகை வாங்கினோம் என்றால் சரியல்ல.

7. அவருடைய வீட்டில் இருந்து தான் கூட்டி வந்தோம். பாலகிருஷ்ணனை எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. எனக்கும் தெரியும். வழக்கிற்கு பின் பாலகிருஷ்ணனுக்கு தனிபட்ட முறையில் உரிமை இல்லாத சொத்தை ஆவணம் எழுத முடியாது என்பதை தெரிந்துகொண்டேனா என்றால் அவருக்கு சொந்தமானதாக இருப்பதால் தான் ஒப்பந்தம் எழுதிகொடுத்தார். ஒப்பந்தத்தில் உள்ள நிபந்தனைகள் எனக்கு தெரியும். 11 மாத வாய்தா எழுதபட்டுள்ளது.

8. அவ்வாறு காலக்கேடுவில் கிரையம் செய்து கொடுக்கவில்லை என்றால் நீதிமன்றத்தில் பணத்தை வைப்பீடு செய்து வழக்கு போடலாம் என்று நிபந்தனை உள்ளது. கடந்த 2017 நாங்கள் மீதி தொகை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்துள்ளோம். ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள காலகேடுவில்

வைப்பீடு செய்யவில்லை என்றால் அதற்குள் அவர் இறந்துவிட்டார். வைப்பீடு தொடர்பான குறிப்புகள் முதல் விசாரணை பிரமாண பத்திரத்தில் கூறவில்லை என்றால் சரியல்ல.

9. நீதிமன்றம் கூறும் போது வைப்பீடு செய்ய தயாராக உள்ளதாக பிரமாண பத்திரத்தில் கூறியுள்ளேன். பிரதிவாதிகளின் பதிலில் கூறபட்டுள்ள விவரம் எனக்கு தெரியாது. வழக்கு கிரைய ஆவணம் மோசடியானது என்பதால் வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 12/09/2025 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2025.09.12 15:50:24 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.